இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு, “நீர் பகல் உணவோ இரவு உணவோ அளிக்கும்போது உம் நண்பர்களையோ, சகோதரர் சகோதரிகளையோ, உறவினர்களையோ, செல்வம் படைத்த அண்டை வீட்டாரையோ அழைக்க வேண்டாம். அவ்வாறு அழைத்தால் அவர்களும் உம்மைத் திரும்ப அழைக்கலாம். அப்பொழுது அதுவே உமக்குக் கைம்மாறு ஆகிவிடும். மாறாக, நீர் விருந்து அளிக்கும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழையும். அப்போது நீர் பேறுபெற்றவர் ஆவீர். ............. ” என்று கூறினார். (லூக்கா 1412-14)

# கோலாலம்பூர் மாமறைமாவட்டம் குடும்பங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்ட ஓராண்டு காலத்தைத் தொடங்கியது!



## ‘குடும்ப அன்பு: இறையழைத்தல் மற்றும் தூய்மைக்கான வழி’

**கோலாலம்பூர்:** வத்திக்கானில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற 10-வது குடும்பங்களின் சந்திப்பு கூட்டத்தைத் தொடர்ந்து கோலாலம்பூர் மாமறை மாவட்டம் குடும்ப நலனை அடிப் படையாகக் கொண்ட ஓராண்டு நடவடிக்கைப் பணிகளைத் தொடங்கியது.

இந்த குடும்ப ஆண்டைத் தொடங்கும் வகையில், சென்ற ஆகஸ்ட் 21 ஆம் தேதி இங்குள்ள, புனித யோவான் பேராலயத் தில் பேராயர் ஜூலியன் லியாவ் அவர்கள் தலைமையில் தொடக்க நிகழ்வு நடைபெற்றது. இக்கொண்டாட்டத்தில் பேராயர் குடும்ப நல வாழ்வு ஆணையத் திற்கான உதவியாளர்கள் அருள்தந்தை பீட்டர் அந்தோனி மற்றும் அருள்தந்தை என்ரூ கூய் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் பேராலயத்தின் பங்குத்தந்தை ஜெரார்ட் திரவியம், மாமறைமாவட்டத்தின் பல்வேறு பங்கு களைச் சேர்ந்த அருள்தந்தையர்களும் பங்கேற்றனர்.

பேராயர் ஜூலியன் அவர்கள் தமது உரை யில், குடும்பம் என்பது நாம் ஒருவரையொருவர் அன்பு செய்யக் கற்றுக் கொள்ளும் இடமாகும். மேலும் இங்கு தான் உறவுகளைப் பற்றி, குறிப்பாக ஒருவரையொருவர் கவனித்துக்கொள் வதைப் பகிர்ந்து கொள்வதை முதலில் கற்றுக்கொள்கிறோம். நாம் நம்முடைய நண்பர்களைத் தேர்ந்தெடுக்கலாம், ஆனால் நம் குடும்பத்தைத் தேர்ந்தெடுக்க முடியாது. எனவே, நமது குடும்பமானது ஒரு நோக்கத்திற்காக அளிக்கப்பட்டுள்ளது. குடும்பம்தான் நமக்கு - ஒருவருக்கொரு வர் எப்படிப் பழகுவது மற்றும் பொறுமை யாக இருப்பது, மன்னிப்பது போன்ற நற்பண்புகளைக் கற்பிக்க வேண்டும். ஆகவே, நமக்கு நெருக்கமானவர்களை நாம் என்றும் உருவாக்கி வளர்ப்போம். நமக்கு நெருக்கமானவர்களுடன் உறவை கட்டியெழுப்பவும் நல்லிணக்கத்தைக்




*பதாகைகள் ஏந்திய தொடக்கப் பவனி*

காக்கவும் நாம் மன்னிக்க கற்றுக்கொள்ள வேண்டும்.

“குடும்ப வாழ்க்கையில் நமக்கு ஏற்படும் போராட்டங்கள் மற்றும் பதட்டங்களை அறிந்திருப்பதால், திருத்தந்தை பிரான்சிஸ் ‘குடும்ப அன்பு: இறையழைத்தல் மற்றும் தூய்மைக்கான வழி’ என்ற கருப்பொரு ளைத் தேர்ந்தெடுத்தார். நம்மில் எழும் பதட்டங்கள் மற்றும் கருத்து வேறுபாடுகள் ஆகியவற்றின் மத்தியில் தான் மற்றவர்களின் தேவைகளை முன் வைத்து தூய்மை வாழ்வுக்கு முன்னேறுகிறோம்” என்றார்.

பேராயர் ஜூலியன் மேலும் கருத்துரைக் கையில், மாமறைமாவட்டமானது, கோவிட் -19 தொற்றின்போது இருந்த நடமாட்டக் கட்டுப்பாடு காரணத்தால், குடும்ப உறுப்பினர் அனைவரும் ஒரே நேரத்தில் வீட்டில் இருப்பதை சமாளிக்க வேண்டி யிருக்கும் போது, குடும்பங்கள் அனுபவித்த மன அழுத்தத்தை நான் அறிவேன். "பல சவால்கள் தலைத்தூக்கின. நமது பல குடும்பங்கள் நம்பிக்கையிழந்து தளர்ந்து போயிருக்கக்கூடும். எனவே, திருத் தந்தை நமக்கு வழங்கிய இந்த ஆண்டுடன், குடும்பத்தின் கருப்பொருளைத் தியானிக்க இந்த பன்னிரெண்டு மாதங்களையும் அர்ப்பணிக்கிறோம். சமீபத்தில் வத்திக் கானுக்குச் சமர்ப்பிக்கப்பட்ட 2023 ஆம் ஆண்டு. ஆயர் கூட்டு ஒருங்கியக்க ஆய்வுகளின் கண்டுபிடிப்புகள் மூலம், அடுத்த பன்னிரெண்டு மாதங்களில் குடும்ப வாழ்க்கையின் எந்த அம்சத்தை வலியுறுத் துவது என்பது குறித்து ஆணையம் திட்டமிடும் என்றும் அவர் கூறினார்.

"நமது சமூகம் தொடர்ந்து வளர்ச்சி காணவும், கிறிஸ்துவில் நாம் அனைவரும் ஒன்றாக இருக்கவும் நமது குடும்பங்கள் முன்னேற்றம் காண வேண்டும் என்று நான் வேண்டுதல் செய்கிறேன்" என்று பேராயர் ஜூலியன் மேலும் கூறினார்.

குடும்ப நலவாழ்வு ஆணையத்தின் மாமறைமாவட்டத்தின் ஆலோசகர் அருள்தந்தை பீட்டர் அந்தோனி அவர்கள் குடும்ப வாழ்க்கைக்கு முக்கியத்துவம் கொடுக்க அனைவரையும் ஊக்குவித்தார். குடும்ப நலவாழ்வு ஆணையம் ஏற்பாடு செய்துள்ள, செய்யவிருக்கும் தொடர் நடவடிக்கைகளில், மாமறைமாவட்டத் திலுள்ள அனைத்து பங்குகளும் பங்கேற்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். குடும்பங்களின் 10-வது உலகக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்ட தலைப்புகளையொட்டிய தூய நற்கருணை இறைவேண்டல், குடும்ப வழிபாடு, குடும்ப செபமாலை மற்றும் திருப்பயணங்கள் என பல்வேறு நடவடிக்கைகளில் பங்கேற்க இறைமக்கள் ஊக்குவிக்கப்பட்டனர்.




ஒருவரையொருவர் பற்றி
நமக்குள் புகார்கள் உள்ளன.
ஒருவரையொருவர் பார்த்து
ஏமாற்றம் அடைகிறோம்.
எனவே, மன்னிப்பு என்றொன்று
இல்லாமல் ஆரோக்கியமான
திருமணமோ ஆரோக்கியமான
குடும்பமோ இல்லை.

**-திருத்தந்தை பிரான்சிஸ்**

# ஆசிய ஆயர் பேரவையின் பொன்விழாக் கொண்டாட்டம்!

"ஆசியாவின் மக்களாக ஒன்றிணைந்துப் பயணித்தல் "என்ற மையக்கருத்தில்— 1970ம் ஆண்டில் திருத்தந்தை ஆறாம் பவுல் ஆசியுடன் தோற்றுவிக்கப்பட்ட ஆசியா ஆயர்கள் பேரவை அதன் 50-ம் ஆண்டு நிறைவைக் கொண்டாடுகிறது. கடந்த இரு ஆண்டுகளாக உலகை ஆட்கொண்ட பெருந்தொற்றின் காரணமாக இவ்விழா ஈராண்டுகள் கழித்து இவ்வாண்டு கொண்டாடப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

உலகளாவிய திருஅவைக்கு ஆசியத் திருஅவை தனது பங்களிப்பை வழங்கியுள்ளதன் வழியாக, அது ஆசிய மக்களுக்குக் கிறிஸ்துவின் முகமாக இருந்துள்ளது என்று ஆசிய ஆயர்பேரவையின் பொன்விழாக் கொண்டாட்டம் குறித்த தனது கருத்தைப் பதிவு செய்துள்ளார் யங்கூன் பேராயரும் ஆசிய கத்தோலிக்க ஆயர் பேரவையின் தலைவருமான பேராயர் Charles Muang Bo.

ஆசிய கத்தோலிக்கத் திருஅவை, மோதல்கள், வறுமை, காலநிலை மாற்றம், பொருளாதார சரிவு ஆகியவற்றால் புதிய சவால்களை எதிர்கொள்கிறது என்று குறிப்பிட்டுள்ள பேராயர் போ அவர்கள், ஆசியத் திருஅவைகள் எவ்வாறு அமைதியின் இறைவாக்கினர்களாக மாறமுடியும் என்பதையும் சிந்திக்க வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார் .

"ஆசியாவின் மக்களாக ஒன்றிணைந்துப் பயணித்தல்"

# மனித மாண்புகள் கட்டி எழுப்பப்படவேண்டும்-உலக கரித்தாஸ் அமைப்பு வேண்டுகோள்!

வத்திக்கான்: இன்றைய நமது உலகம் ஒரு மனிதாபிமான நெருக்கடியை எதிர் கொண்டு வருகிறது என்றும், அதில் மக்கள் மனித மாண்புடன் வாழ்வதற்கான உரிமையை இழந்து வருகின்றனர் என்றும் கவலை தெரிவித்துள்ளார், பன்னாட்டுக் காரித்தாஸ் அமைப்பின் தலைவர் Aloysius John.



பன்னாட்டுக் காரித்தாஸ் அமைப்பின் தலைவர் Aloysius John

ஆகஸ்ட் 19, வெள்ளியன்று, கொண்டாடப் பட்ட உலக மனிதாபிமான தினத்திற்காக வெளியிட்டுள்ள காரித்தாஸ் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ள Aloysius John அவர்கள், நமது உலகம் எதிர்கொள்ளும் மனிதாபிமான நெருக்கடிகளுக்கு ஒரு தீர்வாக, ஒருங்கிணைந்த சூழலியலை ஆதரிக்கக்கோரும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் தொடர் வேண்டுகோளை நாம் பிரதிபலித்து வருகின்றோம் என்றும் கூறியுள்ளார்.

பன்னாட்டுக் காரித்தாஸ் பணியாளர்கள் அனைவரும் எப்பொழுதும் எல்லா இடங்களிலும், குறிப்பாக நெருக்கடியான தருணங்களில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்றனர் என்று தெரிவித்துள்ள Aloysius John அவர்கள், மனிதரின் நலன்களுக்காகத் தங்களின் முழு வாழ்வையும் அவர்கள் அர்ப்பணித்துள் ளார்கள் என்று புகழாரம் சூட்டியுள்ளார்.

இந்த உலக மனிதாபிமான தினம், அனைத்து மக்களுக்கும் அடிப்படை மனித உரிமைகள் பிரச்சனையை சரியான நடவடிக்கைகளின் வழியாகத் தீர்க்க ஒரு வாய்ப்பை வழங்கும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ள Aloysius John, உலகளாவிய ஒற்றுமை, அரசியல் ஆதரவு, மற்றும் மனித நோக்கத்திற்கான அர்ப்பணிப்பு மட்டுமே கணக்கிடமுடியாத இத்துன்பங்களைக் குறைக்க ஒரே வழி என்றும் எடுத்துரைத்தார்,

# உள்நாட்டுப் படைப்பாக 'திருவிவிலியப் பயணம்' நூல் வெளியீடு கண்டது

**பினாங்கு:** திரு ஆர்.கே. சாமி அவர்களின் மற்றொரு நூலாக 'திருவிவிலியப் பயணம்' எனும் நூல் கடந்த ஆகஸ்டு 7-ம் திகதி கோலாலம்பூரில் Msgr தனிஸ்லாஸ் சூசைமரியம் அவர்களால் அதிகாரப் பூர்வமாக வெளியிடப்பட்டது. தொடர்ந்து அவசியம் வாசிக்க வேண்டும் என்றார். திருவிவிலியம் பற்றிய கத்தோலிக்க அடிப்படையிலான போதனைகளையும் கருத்துக்களையும் கற்றறிய இந்தகைய நூல் அவசிநம் என்று, நூலாசிரியரைப் பாராட் டினார்.



நூலை வெளியீடு செய்யும் ஆயர் செபஸ்தியன் பிரான்சிஸ்



அதே நூல் கடந்த ஆகஸ்டு 21-ம் திகதி, பினாங்கு மறைமாவட்ட ஆயர் டத்தோ ஸ்ரீ செபஸ்தியன் பிரான்சிஸ் அவர்களால், புக்கிட் மெர்தாஜாம், புனித அன்னம்மாள் திருத்தலத்தில், தமிழ் திருப்பலியின்போது வெளியிடப்பட்டது Msgr. தனிஸ்லாஸ் சூசைமரியம் அவர்கள், அவர்தம் திறப்பு உரையில் 'கத்தோலிக்கர்கள் பிரிந்த சகோதர சபையினர் கேட்கும் கேள்வி களுக்கு இலகுவாகவும் சரியாகவும் பதில்கள் அளிக்க இதுபோன்ற நூல்களை

தொடர்ந்து, பினாங்கில் நடைபெற்ற வெளியீட்டு விழாவுக்குத் தலைமைத் தாங்கிய ஆயர் அவர்கள், இத்தகைய நூல்கள் வெளிவருவது பொதுநிலையினரின் ஆற்றல் மிக்கப் படைப்புகளுக்கு ஓர் எடுத்துக்காட்டு என்று ஆர்.கே. அவர்களின் இறைப்பணியைப் பாராட்டினார்.

நிறைவாக, பேசிய நூலாசிரியர் ஆர்.கே. இந்நூல் தனது இறைப்பணி வாழ்வின் 50-ம் ஆண்டு நிறைவுக்கு ஒரு மைல் கல்லாக விளங்குவதாகவும், இறைமக்கள் தாங்கள் கற்றுக்கொள்ளும் நம்பிக்கை உண்மை களைப் பிறரோடு பகிர தயங்கக்கூடாது என்றும், பகிர்வதில்தான் திருஅவையின் வளர்ச்சி உள்ளது என்றும் வலியுறுத்தினார். மேலும் இந்நூலை மறைந்த கர்தினால் சோட்டர் பெர்னான்டஸ் அவர்களுக்கு அர்ப்பணம் செய்துள்ளாதாகவும் தெரிவித் தார். இரு வெளியீடுகளின் இறுதியில் புத்தகங்கள் விற்பனை செய்யப்பட்டது. நூல் ஒன்றில் விலை RM 20.00.

இந்நூலைப் பெற விரும்புவோர் சகோ. ஆர். கே. அவர்களுடன் தொடர்புகொள்ள லாம். (தொடர்புக்கு 01222854520)

-அந்தோணி இன்னாசி

# திருஇசை பாஸ்கா மறைபொருளைக் கொண்டாட துணைபுரிகிறது

**கோலாலம்பூர்:** கோலாலம்பூர் மாமறை மாவட்டத்தைச் சேர்ந்த அருள்தந்தை சுரேன் துரைராஜ் அவர்கள் கடந்த ஆகஸ்ட் 20 அன்று **"நாம் கொண்டாடும் திருப்பலி, நாம் பாடும் பாடல்கள்"** என்ற தலைப்பில் திருஇசை பணிக்குழு உறுப்பினர்களுக்காக பாத்திமா அன்னை பங்கில் ஒரு உருவாக்கப் பயிற்சியை நடத்தினார்.

திருப்பலியானது அறிமுக சடங்குகளைத் தொடர்ந்து வார்த்தையின் வழிபாடு, பின்னர் நற்கருணை வழிபாடு மற்றும் இறுதி சடங்கு என நான்கு கூறுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது என்று விளக்கினார்.

திருவழிபாட்டில் சடங்கிற்குள் வெளிப் படும் பாஸ்கா மறைபொருளுக்கு நாம் முழுமையாக சரணடைய திருஇசை மிக முக்கியமான பங்குவகிக்கிறது. சடங்கு வெறும் சடங்காக தோன்றும்போது அது நம்மை மகிழ்விப்பதற்கோ ஆர்வமூட்டு வதற்கோ அல்ல. திருவழிபாட்டு திருஇசை என்பது பாடல்கள், புகழ்தல், இறை வேண்டல்கள் மற்றும் வழிபாட்டு முறைகள் என ஒரு தனித்துவமான வழிபாட்டு பயன்பாட்டிற்கு திருஇசை இன்றிய மையாதது என்றார். மேலும், திருவழிபாட்டின் பல்வேறு பகுதிகளுக்குப் பொருத்தமான பாடல்களை எவ்வாறு தேர்வு செய்வது என்பது பற்றிய குறிப்புகளையும் அருள்தந்தை சுரேன் பகிர்ந்து கொண்டார்.

## அறிவிப்பு

தெ ஹெரால்டு (இறைத்தூதன்) மலேசிய கத்தோலிக்க வார பத்திரிக்கை எதிர்வரும் 11-செப்டம் பர் 2022 முதல் அச்சிடப்பட்டு உங்கள் பங்குகளில் விற்பனைக்கு வரவுள்ளது. அதே வேளையில் இந்த ஆண்டு இறுதிவரை தொடர்ந்து இயங் கலை (online) வாயிலாகவும் வெளிவரும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

இதனிமித்தம் இந்த வெளியீடு மாற்றுப் பணிக்கு வழிசெய்ய ஏதுவாக வரும் 04 செப்டம்பர் அன்று தெ ஹெரால்டு (இறைத் தூதன்) வெளிவராது என்ப தையும் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி

# மனதில் வறியோர்க்கு இடமளிப்போம்!

இன்றைய இறை வார்த்தை தாழ்ச்சி நிறைந்த மனிதனாக வாழ நமக்கு கடுமையான அழைப்பு விடுக்கிறது. சென்ற வார இறைவார்த்தை வழியாக ஒடுக்கமான வாயில் வழியாக பாடுபட்டு விண்ணரசில் நுழைந்திட அழைப்பு விடுத்த இறைவன் இன்றைய இறை வார்த்தை வழியாக விண்ணரசின் திருவருந்தில் பங்கேற்க முதலிடத்தை தேடாமல் மன தாழ்மையுடன் இறுதி இடத்தைத் தேடும்படி பணிக்கிறார்.

விருந்தின் அடிப்படையில் ஆண்டவர் கூறிய அறிவுரை ஆழமானது. ஒருவனை உயர்த்துகிறவரும் தாழ்த்துகிறவரும் இறைவனே. மனிதனின் உருவம் பார்த்து இறைவன் அவனை மதிப்பதில்லை. எனவேதான் யாகப்பர் கூறுகிறார், பொன் மோதிரமும், பளபளப்பான ஆடையும் அணிந்த ஒருவரும் அழுக்குக்கந்தையணிந்த ஏழை ஒருவரும் உங்கள் தொழுகைக் கூடத்தினுள் வருகிறார்கள் என வைத்துக்கொள்வோம். அப்பொழுது நீங்கள் பளப்பளப்பான ஆடை அணிந்துவர்மீது தனி கவனம் செலுத்தி அவரைப் பார்த்து, "தயவு செய்து இங்கே அமருங்கள் என்று சொல்கிறீர்கள். ஏழையிடமோ, "அங்கே போய் நில்" என்கிறீர்கள் ( யாகப்பர் 2:2-3). இப்படி மக்களை வேறுபடுத்திப் பார்ப்பது தவறு.

மறைநூல் அறிஞரும் பரிசேயரும் தாங்கள் சட்டங்களை அனுசரிப்பதாலும் சமயப் பெரியோர்கள் என்பதாலும் தனிச் சலுகையுடன் நடத்தப்பட வேண்டும் என்று விரும்பினர். ஆம், இன்று நம் திருஅவையிலும் பணி வாழ்வில் தலைமை வகிப்போர் ஒரு சிலர் தான் என்ற ஆணவத்திலும் பதவிக்கு முதலிடம் தந்து பசுத்தோல் போர்த்திய புலியாக உலா வருகிறார்கள். அது மட்டுமில்லாமல் உயர்ந்த படிப்பு, உயர்ந்த பதவி பணக்காரன் இவர்கள்தான் முதன்மையாக இருக்க வேண்டும் என்று விரும்புகிறார்கள். ஆனால் இச்செயல் ஆண்டவரின் பார்வையில் தவறு என்பதை இன்றைய வாசகம் தெள்ளத் தெளிவாக எடுத்தியம்புகின்றன.

ஆயக்காரனைப் போல் தாழ்ச்சியுடன் இறைவனை வேண்டுவோர் உயர்த் தப்படுவர். பரிசேயனைப் போல தன்னை மிகவும் உயர்த்தி இறையரசில் இடம் பிடிக்க முயல்வோர் தாழ்த்தப்படுவர். பெருமை, பகட்டு, ஆணவம் ஆகியவற்றிற்கு இறையரசில் இடமில்லை என்பதை நாம் உணர வேண்டும். ஆணவம் தலையான ஏழு பாவங்களில் முதன்மையானது என்பதை மனதில் நிறுத்துவோம். மாறாக , மனித உள்ளத்தில் மறைந்திருக்கும் பண்புகளாகிய பணிவும் அமைதியுமே உங்களுக்கு அழியாத அலங்காரமாய் இருக்கட்டும் . கடவுள் பார்வையில் அதுவே விலையுயர்ந்தது.(1 பேதுரு 3:4)

ஒருவர் மற்றவரோடு பழகும் பொழுது எல்லோரும் மனதாழ்மையை ஆடையாய் அணிந்திருங்கள், ஏனெனில், செருக்குற்றோரைக் கடவுள் இகழ்ச்சியுடன் நோக்குவார்; தாழ் நிலையில் உள்ளவர்களுக்கோ கருணை காட்டுவார் (1பேதுரு 5:5) என்பதை விசுவசிப்போம். தாழ்ச்சி என்பது தன்னைக் குறித்து குறைவாக நினைப்பது அல்ல, தன்னைப்பற்றியே நினையாமல் இருப்பது. எவர் ஒருவர் தன்னைப் பற்றி நினையாமல், பிறரைப் பற்றி உயர்வாக நினைக் கின்றாரோ, அவர் உயர்த்தப்படுவார் என்பதை நினைவில் கொண்டு செயல்படுவோம். மனிதர்களிடமிருந்து கைம்மாறு எதிர்பாராதவர் கடவுளிடமிருந்து கைம்மாறு பெறுவார்கள்.

-ஆ. லூர்தம்மாள், காஜாங்

**ஆண்டின் பொதுக்காலம் 22-ம் ஞாயிறு**

| | |
|---|---|
| 1-ம் வாசகம் | சீராக் 3: 17-18, 20, 28-29 |
| தி. பாடல்: | 68: 3-4ac. 5-6ab. 9-10 |
| 2ம் வாசகம்: | எபி 12: 18-19, 22-24a |
| நற்செய்தி: | லூர்க்கா 14: 1, 7-14 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 3**
**வாரநாள் முதல் வாசகம் –ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**